# மீகஹகிவுல பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 28 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மீகஹகிவுல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

(அ) மீளாய்வாண்டிற்கான மிகையாகிய ரூபா 19,483,381 இனை திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக ரூபா 18,893,704 இனால் வரவு வைத்துள்ளமையால், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 38,377,085 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய ரூபா 366,500 இற்கான மந்திர்மார் படி மற்றும் பதில் கடமைப்படி என்பவற்றில் மீளளிப்புத் தொகைகள் கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான பெறுவனவுகள் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர்கள் ரூபா 366,500 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 263,077 தொகை எனினும், அதனை ரூபா 121,127 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் ரூபா 141,950 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 145,000 இற்கான விழா முற்பணம், பதவியணிக் கடன் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 145,000 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 913,672 தொகை எனினும் ரூபா 1,839,248 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் சொத்துகள் ரூபா 925,576 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் இலக்கம் 7017020 கொண்ட நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 366,706 தொகை எனினும், அதனை ரூபா 300,140 என ரூபா 66,566 குறைவாகவும் இலக்கம் 7016915 கொண்ட நடைமுறைக் கணக்கில் ரூபா 94,921 இற்கான மறை மீதி ரூபா 89,032 இற்கான மறை மீதி என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 5,889 இனால் மறை மீதி குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்திருந்த தகவல்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,568,860 தொகை எனினும், அதனை ரூபா 1,241,739 தொகை என ரூபா 1,327,121 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 ஆண்டின் போது கிடைத்த வருமானப் பெறுவனவுகள் பட்டோலைகள் மற்றும் மதிப்பிடப்பட்ட முத்திரை கட்டண வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது ஆண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் மிகைக் கணிப்பீடு ஒன்று நடைபெற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஏ) கணக்கீடு செய்திருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவை நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,541,010 தொகை எனினும், அதனை ரூபா 328,045 தொகை என ரூபா 1,212,965 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், ஆண்டின் போது கிடைத்திருந்த பட்டோலைகளின் பிரகாரம் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,003,657 தொகையும், 2014 பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 500,000 தொகை எனினும் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த வருமானம் ரூபா 2,213,433 தொகை என்பதால் வருமானம் மிகை கணிப்பு ஒன்று அவனானிக்கப்பட்டது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதி ஒன்று தொடர்புடைய துணைப்பதிவேட்டுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 9,881,285 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 45,711,101 இற்கான செலவு மீதி ஒன்று காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டுய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30.685,145 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,735,961 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29,474,176 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 | உள்ளுராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்கு பண்ட உதவிகள் வழங்குதவற்காக 88 சந்தர்ப்பங்களில் ரூபா 901,750 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல்கள் சட்டம் | சுற்றாடல் அனுமதிப்பத்திர பெற்றுக் கொள்ள வேண்டிய 16 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நி.பி. 371 | 2014 ஆண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 413,673 இற்கான முற்பணங்களை 2015 ஆகஸ்ட் வரை தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 396 (ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை கடந்துள்ள கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்பிக்கப்படாத ரூபா 13,427 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 914,202 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 423,494 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,337,696 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வாடகை

--------------

சபைக்குச் சொந்த பாதை தகர்க்கும் இயந்திரத்தை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 32,400 நிலுவை தொகையை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 328,045 உம் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,241,739 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

(அ) வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொகை ரூபா 2,448,674 இற்கான 05 நிர்மாண வேலைகள் 2015 ஆகஸ்ட் வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 22 கடைகளுக்காக கடை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதும், புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாமல் பழைய வாடகையே அறவிடப்பட்டுள்ளது.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---------------------------------------------------

(அ) 2002 ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட பாதிட்டு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 533,100 தொகை செலவிடப்பட்டு டொலமயிட் செயற்திட்டமொன்றிக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடம் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டமையால் 2003 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) தரைப்படை செயற்பாட்டுக் கடமைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு 2010 அக்டோபர் 27 திகதி மீண்டும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த இலக்கம் 53 – 5073 கொண்ட கப் வண்டி ஓட்டத்திற்கு தகுதியற்ற பழுதடைந்த நிலையில் சபை வளவில் நிறுத்தப்பட்டு காணப்பட்டன.

(இ) இலக்கம் 78 – 6932 கை டிரக்டர் பயன்படுத்தப்படாமல் செயற்படாமல் காணப்பட்டது.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------------

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கும் குப்பைகள பதுளை வீதி 13 வது மைல் கம்பத்திற்கு அண்மையிலுள்ள காணியில் ஒழுங்கற்ற விதமாக குவிக்கப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்